# புதுச்சேரி அரசு

## புதுச்சேரி மாசுக்கட்டுப்பாடு குழுமம்

## சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத் திட்டம்

### சான்றிதழ் படிப்பு: மின்சார வாகன (EV) சார்ஜிங் நிறுவல் நுட்ப நிபுணர்

திறன் இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக மாண்புமிகு பிரதமர் அவர்களால், இந்திய அரசின் சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC) வழியாக பசுமை திறன் மேம்பாட்டு திட்டம் (GSDP) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.இந்தத் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுவின் (PPCC) சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத் திட்ட (EIACP Hub) மையம் **“மின்சார வாகன (EV) சார்ஜிங் நிறுவல் நுட்ப நிபுணர்”** தலைப்பில் ஒரு சான்றிதழ் பயிற்சி 19 ஜனவரி 2026 முதல் நடத்துகிறது.

புதுச்சேரி மாசு கட்டுப்பாடு குழமத்தின் (PPCC) கீழ் செயல்படும் புதுச்சேரி சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும், வாழ்வாதார திட்டத்தின் (EIACP) கீழ், ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு பசுமை திறன் மேம்பாட்டு திட்டத்திற்கான (GSDP) பயிற்சிகளை நடத்திவருகிறது. இந்த ஆண்டு, 22.12.2025 முதல் **மின்சார வாகன (EV) சார்ஜிங் தொழில்நுட்ப நிபுணர்** பயிற்சியை அனுபவம் வாய்ந்த அறிவியல் வல்லுநர்கள் மூலம் நடத்தப்பட இருக்கிறது.

இந்தப் பயிற்சியில், வகுப்பறை பாடங்கள் மற்றும் செய்முறைப் பயிற்சி மூலம் மின்சார வாகன (EV) சார்ஜிங் நிலையங்களை நிறுவல், இயக்கம் மற்றும் பராமரிப்பு தொடர்பான தொழில்நுட்ப அறிவும் நடைமுறை திறனும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும். மேலும், மின்சார போக்குவரத்து துறையில் தொழில் தொடங்கும் திறனையும் வேலைவாய்ப்பு பெறும் திறனையும் மேம்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

இப்பயிற்சி வகுப்பிற்கு கட்டணம் ஏதும் இல்லை. புதுச்சேரி பகுதியைத் தவிர்ந்த பிற இடங்களிலிருந்து பங்கேற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலாளர்களுக்கு இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே, தேவையெனில் நேர்முகத் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

56 நாட்கள் நடைபெறும் இச்சான்றிதழ் பயிற்சி வகுப்பு 22 டிசம்பர் 2025 அன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள கூகுள் படிவத்தின் (Google Form) இணைப்பின் மூலம் விண்ணப்பிக்கலாம்.: https://forms.gle/4A1N6SJP22Rd4eqK8

**கல்வி தகுதி:** மின்சாரம், இயந்திரவியல், கருவி மற்றும் கட்டுப்பாடு (I&C), மின்சக்தி துறை போன்ற துறைகளில் தொடர்புடைய அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பின்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்று பெற்றிருக்க வேண்டும்: பட்டப்படிப்பு (UG Certificate) அல்லது அதற்கு இணையான தகுதியுடன் குறைந்தது 1 ஆண்டு அனுபவம், அல்லது 12ஆம் வகுப்பு (அறிவியல் பிரிவு) தேர்ச்சி பெற்று 1.5 ஆண்டு அனுபவம், அல்லது 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று 2 ஆண்டு அனுபவம், அல்லது NSQF Level 3.0 தகுதியுடன் 3 ஆண்டு அனுபவம், அல்லது NSQF Level 3.5 தகுதியுடன் 1.5 ஆண்டு அனுபவம்.

**வயது வரம்பு:** 18 வயது மற்றும் அதற்கு மேல்.
**விண்ணப்பிக்கும் தேதி:** 10.11.2025
**விண்ணப்பிக்க கடைசி தேதி:** 10.12.2025.
**பாடநெறியின் கால அளவு:** 56 நாட்கள்;
**இடங்கள் எண்ணிக்கை:** 30 (முப்பது).
**இடம்:** முனைவர் அப்துல்கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம், லாஸ்பேட்டை, புதுச்சேரி.

**மேலும் தகவலுக்கு:** 0413 – 2201256 , 8344499914, 9789702745 என்ற தொலைபேசி எண்ணை காலை 10.00 முதல் மாலை 5.30 மணி வரை தொடர்பு கொள்ளவும் அல்லது envis@py.gov.in / envispdy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

***